**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII–Code of Criminal Procedure)**

**PRINCIPAL ASSISTANT SESSIONS JUDGE**

**IN THE COURT OF THE PRINCIPAL ASSISTANT SESSIONS COURT, PALANI.**

**Sessions Case No.** 57/2022

**Prosecution** – PW10 / LW11

**Deposition of witness for : Defence**

**Court**

**Name** : **திரு.சிவசங்கர்**

**Father's Name** :

**Village** :

**Taluk** :

**Caste** :

**Calling** :

**Religion** :

**Age** :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of the day of 22-07-2025

எதிரிகள் ஆஜர்

முதல் விசாரணை:

நான் தற்போது தாராபுரத்தில் வசிக்கிறேன். 4 ஆண்டுக்கு முன்பு தெரசம்மாள் காலணி, 13 வது வார்டில் வசித்தேன். ஆஜர் எதிரிகளை பார்த்துள்ளேன். அ.சா.1 ஐ தெரியும். அ.சா.2 பரமசிவத்தை தெரியும். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. தேதி, மாதம் ஞாபகமில்லை, 2012ல் பரமசிவம் என்பவரை எட்டுகடை வீதியில் வைத்து, இரவு சுமார் 11 மணியளவில் அவரை அன்னகாமு இரும்பு கடை அருகில் உள்ள நபர்களுக்கும் பரமசிவத்திற்கும் பிரச்சனை காரணமாக குத்திவிட்டதாக கேள்விப்பட்டேன். அவரை அரசு மருத்துவமனையில் அனுமதித்தார்கள் அங்கு சென்று பார்த்தேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154-இன் கீழ் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

மாரியம்மன் கோவில் திருவிழாவின்போது எங்கள் தெருவில் இருந்து ரத ஊர்வலம் வழக்கம் என்றால் சரிதான். ரத ஊர்வலத்திற்கு நான், அ.சா.1, அ.சா.2 மற்றும் சிலர் என்னுடன் வந்தனர் என்றால் சரிதான். ரத ஊர்வலத்தின்போது ஆஜர் எதிரிகள் பெண்களை சச்சரவு செய்ததாக தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம், மறுநாள் பேப்பர் வாசித்து தெரிந்து கொண்டேன். அந்த பிரச்சனையில் தான் அ.சா.1ஐ

குத்தினார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.  07.03.2012ம் தேதி இரவு 11.30 மணிக்கு ரத ஊர்வலம் போகும்போது எங்கள் ஊரை சார்ந்த மக்களை கேலி செய்த காரணத்தினால்  பரமசிவத்திற்கும், ஆஜர் எதிரிகளுக்கும் ஏற்பட்ட பிரச்சனையால் ஆஜர் எதிரிகள் பரமசிவத்தை கத்தியால் குத்தியதை நான் நேரில் பார்த்தேன் என்று போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்.K.ரேணுகாதேவி,
முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.